1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No. 68 /2025

2025 வது ஆண்டு செப்டம்பர் மாதம் 25-ம் நாள் வா.சா.4 ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.செல்லத்துரை | வட்டம் | |
| த.பெ | திரு.கக்களமடையான் | கிராமம் | அணைத்தலையூர் |
| வயது | 66 | மதம் | |

<u>25.09.2025 முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கிற்கு 3 ம் தரப்பினர் ஆவேன். இந்த வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கின் விபரங்கள் எனக்கு எனது மருமகன் கூறி தெரியும். இந்த வழக்கின் வாதிகள் எனது மருமகன் மற்றும் மருமகள்கள் ஆவார்கள். இசக்கி என்ற பெரிய இசக்கி என்பவருக்கு வாரிசு சான்றிதழ் கோரி 1 ம் பிரதிவாதியிடம் தாக்கல் செய்த மனுவானது போதிய ஆவணங்கள் இல்லாத காரணத்தினாலும் இறப்பு சான்றிதழ் இல்லாத காரணத்தினாலும் நிராகரிக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் வாரிசு சான்றிதழ் கோரி மனு தாக்கல் செய்த விபரம் மட்டும் எனக்கு தெரியும்.